# *முஸ்லிம் பெண்களின் உயர்கல்வி வளர்ச்சி: எலமல்பொத பிரதேசத்தை மையப்படுத்திய ஓர் ஆய்வு*

# Growth of Muslim Women's Higer Education – A Study Based on Elamalpothe Area


**Miss. J. Fathima Minsara (1) and Mr. SMM. Mazahir (2)**

(1)Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka.
(2)Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka.
(fathimaminsara@gmail.com, mazahirsmm@gmail.com)



**ஆய்வுச் சுருக்கம்**

*பொதுவாக 1950களுக்கு முன் ஆண்களின் கல்விக்கு முன்னுரிமை கொடுத்தல், எழுத்தறிவுமட்டும் பெண்களுக்குப் போதுமானது என்ற மனப்பான்மை போன்ற பல்வேறு காரணங்களினால் பெண்களுடைய கல்வி பின்தள்ளப்பட்டிருந்தது. 1950இற்குப் பிற்பட்ட காலங்களிலேயே முஸ்லிம் பெண்கள் கல்வியைப் பெறத் தொடங்கினர். இதனடிப்படையில் எலமல்பொத பிரதேசத்திலும் பெண்கல்வி வளரத் தொடங்கியது. 1965களுக்குப் பின்னர் பெண்கள் பாடசாலைக்குச் சென்று பரவலாகக் கல்வி கற்கத் தொடங்கினர். அந்தவகையில் இப்பிரதேச முஸ்லிம் பெண்களின் உயர்கல்வி வளர்ச்சியினை தற்போது நோக்கும் போது ஆண்களைவிட அதிகமாகவே உள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாய்வு எலமல்பொத பிரதேச முஸ்லிம் பெண்களின் உயர்கல்வி வளர்ச்சியை அறிந்து மதிப்பிடல், உயர் கல்விவளர்ச்சிக்குத் தேவையான போதியளவு வளங்கள் காணப்படுகின்றனவா எனக் கண்டறிதல், உயர்கல்வியைத் தொடர்வதில் உள்ள சவால்கள், பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவற்றைத் தீர்ப்பதற்கான ஆலோசனைகளை முன்வைத்தல் போன்றவற்றை பிரதான நோக்கங்களாகக் கொண்டுள்ளது. இலங்கையில் முஸ்லிம் பெண்களின் உயர் கல்வியை மதிப்பிடுவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் எலமல்பொத முஸ்லிம் பெண்களின் உயர்கல்வி வளர்ச்சியை மதிப்பிடுவதற்கான முதல் முயற்சியாக இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. சமூகவியல், பண்புசார் ஆய்வான இதில் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவுகளாக: ஆய்வுப் பிரதேசத்திலுள்ள உயர்கல்வி பெற்ற, பெறுகின்ற முஸ்லிம் பெண்களிடம் பெறப்பட்ட நேர்காணல்கள், கலந்துரையாடல்கள், வினாக்கொத்து மூலம் பெறப்பட்ட தகவல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகளாக ஆய்வு தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளங்கள், அறிக்கைகள், பாடசாலைப் பதிவுத் திரட்டுப் புத்தகம் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.*



**கலைச் சொற்கள்:** *எலமல்பொத, உயர்கல்வி, முஸ்லிம் பெண்கள், வளர்ச்சி*


## ஆய்வின் அறிமுகம் (Introduction)

இஸ்லாம் பரிபூரணமான வாழ்க்கைத் திட்டம் என்றவகையில் அது கல்விக்குப் பாரியதொரு முக்கியத்துவத்தைக் கொடுத்துள்ளது. இஸ்லாம் அறிவைத் தேடிப் பெற்றுக் கொள்ளும்படி ஆண்கள், பெண்கள் என சகலரையும் பணிக்கின்றது. ஒரு முஸ்லிம் அறிவின் மூலமே தனது இவ்வுலக நிலையை வளப்படுத்திக் கொள்ள முடிவது போல மறுமை வாழ்வையும் தரப்படுத்திக் கொள்ள முடியும்.

உயர்கல்வி என்பதனை வரையறுப்பதில் கருத்து முரண்பாடுகள் நிலவுகின்றன. இலங்கையில் பெரும்பாலும் உயர்கல்வி என்பது பல்கலைக்கழகக் கல்வி என்றே கொள்ளப்படுகின்றது. ''இலங்கையில் உயர்கல்வி அமைச்சின் கீழுள்ள எல்லா ஸ்தாபனங்களாலும் வழங்கப்படும் கல்வி உயர்கல்வி எனப்படுகின்றது. உதாரணமாக: பல்கலைக்கழகங்கள், நுண்கலை கல்லூரிகள், ஆயர்வேத வைத்தியக் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள், விதந்துரைக்கப்பட்ட மாகாணக் கல்லூரிகள் போன்றவற்றினால் வழங்கப்படும் கற்கைகள் போன்றன இதில் அடங்கும்''**(பாத்திமா சுல்பிகா. 1994, தேசிய கல்வி மாநாடு, ப.39)**

இலங்கையில் உயர்கல்வி முறைசார் கல்விக்குட்பட்ட ஒன்றாகக் கொள்ளப்படுகின்றது. அத்துடன் உயர்கல்வியில் பல்கலைக்கழகக்

கல்வியோடு பட்டப்பின் படிப்புக் கல்வி, உயர் தொழிற்கல்வி, தொழில்நுட்பக்கல்வி போன்றன உள்ளடக்கப்படுகின்றன. **(சைபுதீன். என்.பீ.எம்., ஹஸ்புல்லாஹ். எஸ்.எச்., 1993, ப.77)**

இலங்கையில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளே உயர்கல்வியின் முன் நிபந்தனையாகக் கொள்ளப்படுகின்றன. கல்வியியல் நோக்கில் ஒருவருக்கு பாடசாலைக் கல்விக்குப் பின் வழங்கப்படும் அனைத்து அனுபவங்களும் பயிற்சிகளும் உயர்கல்வி எனப்படுகின்றது.

ஆரம்பகாலகட்டத்தில் எலமல்பொத பிரதேச மக்கள் பல்வேறு துறைகளில் தமது கவனத்தைச் செலுத்தியதால் கல்வியில் அவர்கள் நாட்டம் கொள்ளவில்லை. அவர்கள் வியாபாரம், விவசாயம் போன்ற துறைகளில் அதிக ஈடுபாடு கொண்டார்கள். இப்பிரதேச முஸ்லிம்களுக்கு குறிப்பாகத் தமிழ் மொழியறிவு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மறுக்க முடியாது. இப்பிரதேச பழைய காணி உறுதிப்பத்திரங்கள்அம்மக்கள் தமிழ் மொழியறிவைப் பெற்றிருந்தனர் என்பதற்குச் சான்று பகர்கின்றன. பழைய காணி உறுதிப்பத்திரங்கள் சிலவற்றில் முஸ்லிம்கள் தமிழில் தம் பெயர்களை எழுதியுள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது. அத்தோடு, இவர்கள் சிங்கள மொழியிலும் தேர்ச்சி பெற்றவர்களாகக் காணப்பட்டனர். அத்தோடு சமய அறிவு பெறுவதுதான் கல்வி என்ற எண்ணமும் நீண்ட காலமாக அம்மக்களிடையே நிலவி வந்துள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் இவர்கள் தங்களுடைய கல்விக்கான முயற்சிகளை எடுப்பதற்குப் போதுமான சனத்தொகை அக்காலப்பகுதியில் இருக்கவில்லை. இப்பிரதேசத்தில் 1940ஆம் ஆண்டுக்குப் பின்பு தான், கல்வி நிலை வளர்ச்சியடைய ஆரம்பித்தது.

இப்பிரதேச முஸ்லிம்களுக்கு ஆரம்பகாலம் முதலே கல்வி கற்க வேண்டும் என்ற ஆர்வம் காணப்பட்டது. 1929ஆம் ஆண்டு மாதிப்பொலை பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மொழிப் பாடசாலையின் முதல் மாணவி இப்பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இவ்விடயம் இங்குள்ள முஸ்லிம்களின் கல்வியின் மீதான ஆர்வத்தையே எடுத்துக்காட்டுவதாக உள்ளது. அதிக ஆர்வத்துடன், சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரம் நடைபயின்று அப்பாடசாலைக்கு மாணவர்கள் சென்று வந்தனர். இப்பிரதேசத்தில் ஆண்களின் எழுத்தறிவு வீதம் மிகச்சிறப்பாக இருந்தது. முதியோர்களும் தமிழில் மட்டுமன்றி சிங்கள மொழியிலும் ஆற்றல் பெற்றிருந்ததோடு, ஐந்தாம் வகுப்புவரை மாத்திரமே மாதிப்பொலையில் உள்ள தமிழ்ப் பாடசாலையில் கல்வி கற்கக் கூடியவர்களாக இருந்தனர். பிற்பட்ட காலங்களில் ஆண்கள் மாத்திரம் இப்பிரதேசத்திலிருந்து ஏறத்தாழ மூன்று கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள மாதிபொலை சிங்களப் பாடசாலையில் கல்வி கற்கச் சென்றனர். ஆகவே, அவர்கள் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இருமொழிப் புலமை கொண்டோராகக் காணப்பட்டனர்.

முஸ்லிம் பெண்களைப் பொறுத்தவரையில் தமிழ் மொழிப் பாடசாலைக் கல்வியுடன் மத்ரஸாக் கல்வியையும் பெற்றுக் கொண்டனர். இவர்கள் அறபுத்தமிழ் நூல்களை விரும்பிப் படிப்போராகக் காணப்பட்டனர். தொழுகை சம்பந்தமான சட்ட விதிகளை உள்ளடக்கிய தொழுகை ஷாபிஈ, தலைபாத்திஹா, தக்கசூரத்து, புர்தா, சுப்ஹான மவ்லிது, பத்து மவ்லிது போன்ற நூல்களை இப்பிரதேசத்து முஸ்லிம்கள் தனியாகவும், கூட்டாகவும் படித்தனர். இவையாவும் இப்பிரதேச முஸ்லிம் மக்களின் கல்வி ஆர்வத்தையே எடுத்துக் காட்டுகின்ற

ஆரம்பகாலங்களில் இப்பிரதேசத்தில் பெண்களுடைய கல்வி நிலையானது தளர்வடைந்து காணப்பட்டது. அக்காலத்தில் ஆண்களின் கல்விக்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டது. கல்வி மீதான பெற்றோரின் அக்கறையின்மை, பொருளாதாரப் பிரச்சினைகள், தவறான மதப்புரிந்துணர்வு, பெண்கள் பற்றிய குறுகிய நோக்கு போன்ற காரணங்களினால் பெண்களுடையை கல்வி பின்தள்ளப்பட்டது. 1950களுக்கு முன் எழுத்தறிவுக்காக மட்டுமே பெண்கள் தரம் 5 வரை கல்வி கற்கக்கூடிய நிலமை காணப்பட்டது.

1950இற்குப் பிற்பட்ட காலங்களில் இப்பிரதேசத்திலுள்ள பெண்கள் அயல் பிரதேசமான மாதிபொலைக்குச் சென்று கல்வியைப் பெற்றுக் கொண்டனர். பிற்பட்டகாலங்களில் இவ்வூரில் பெண்களுடைய கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. 1965களுக்குப் பின்னர் பெண் பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்று கல்வி கற்பது பரவலாகியது. 1975களுக்குப் பின்பு அவர்கள் வெளியிடங்களுக்குச் சென்றும் கல்வி கற்கத் தொடங்கினர். அத்துடன், இப்பிரதேச முஸ்லிம்கள், இன்று கல்வித் துறையில் சிறந்து விளங்குவதற்கு இங்கு காணப்படும் எலமல்பொத முஸ்லிம் மகா வித்தியாலயம் என்ற தமிழ் மொழிப் பாடசாலையும் காரணமாகும். இவர்களின் கல்வி வளர்ச்சியில் இப்பாடசாலைக்கு ஒரு சிறப்பிடம் உண்டு. ஆரம்பத்தில் அதிகளவில் கலைப்பிரிவில் மாத்திரமே உயர் கல்வியைக் கற்ற இவ்வூர் பெண்கள் தற்போது ஏனைய துறைகளிலும் ஈடுபாடு காட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் எலமல்பொத பிரதேச முஸ்லிம் பெண்களின் உயர்கல்வி வளர்ச்சியினை நோக்கும் போது ஆண்களைவிட அதிகமாகவே உள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஆய்வின் நோக்கங்கள் (Purpose of the Study)

- எலமல்பொத பிரதேச முஸ்லிம் பெண்களின் உயர்கல்வி வளர்ச்சியை அறிந்து மதிப்பிடல்.

- அங்கு உயர்கல்வி வளர்ச்சிக்குத் தேவையான போதியளவு வளங்கள் காணப்படுகின்றனவா எனக் கண்டறிதல்.
- உயர்கல்வியைத் தொடர்வதில் உள்ள சவால்கள், பிரச்சினைகளை அடையாளம் கண்டு, அவற்றைத் தீர்ப்பதற்கான ஆலோசனைகளை முன்வைத்தல்.

**ஆய்வின் முக்கியத்துவம் (Importance of the Study)**

இலங்கையில் முஸ்லிம் பெண்களின் உயர் கல்வியை மதிப்பிடுவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் எலமல்பொத முஸ்லிம் பெண்களின் உயர்கல்வி வளர்ச்சியை மதிப்பிடுவதற்கான முதல் முயற்சியாக இவ்வாய்வு அமைந்துள்ளதனால் இது முக்கியம் பெறுகின்றது.

ஆய்வுப் பிரதேச முஸ்லிம் பெண்கள் உயர் கல்வியில் வளர்ச்சியடைந்திருப்பதற்கான காரணங்கள், முஸ்லிம் பெண்களின் உயர் கல்வி வளர்ச்சிக்கு செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் மற்றும் முஸ்லிம் பெண்கள் உயர் கல்வியைப் பெறுவதில் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் என்பன அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாலும் இவ்வாய்வானது முக்கியம் பெற்று விளங்குகின்றது.

இப்பிரதேசத்தின் முஸ்லிம் பெண்களின் உயர் கல்வி வளர்ச்சியை அடையாளப்படுத்துவதனூடாக எதிர்கால சந்ததியினருக்கான சில வழிகாட்டல்களையும் முன்மொழிவுகளையும் இவ்வாய்வு உள்ளடக்கியுள்ளதன் மூலமும் இது முக்கியம் பெறுகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை (Research Problem)**

எலமல்பொத பிரதேச முஸ்லிம் பெண்களின் உயர் கல்வி வளர்ச்சியடைந்து செல்கின்றதா? என்ற ஆய்வுக் கேள்வியே இவ்வாய்வின் ஆய்வுப்பிரச்சினையாக உள்ளது.

**ஆய்வு முறை (Methodology)**

இவ்வாய்வு சமூகவியல், பண்புசார் ஆய்வாக அமையப் பெறுவதால் இவ்வாய்வில் முதலாம் நிலைத் தரவுகள், இரண்டாம் நிலைத் தரவுகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

**முதலாம் நிலைத் தரவுகளாக:** ஆய்வுப் பிரதேசத்திலுள்ள உயர் கல்வி பெற்ற, பெறுகின்ற முஸ்லிம் பெண்களிடம் பெறப்பட்ட நேர்காணல்கள், கலந்துரையாடல்கள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் இவ்வாய்வுக்குத் தேவையான தகவல்கள், தரவுகளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் ஆய்வுப் பிரதேசத்திலுள்ள 100 பெண்களை எழுமாறாகத் தெரிவு செய்து வினாக்கொத்துக்கள் வழங்கி, அவர்களிடம் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. சில தகவல்கள் Microsoft Excel மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

**இரண்டாம் நிலைத் தரவுகளாக:** ஆய்வு தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளங்கள், அறிக்கைகள், பாடசாலைப் பதிவுத் திரட்டுப் புத்தகம் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு (Literature Review)**

எஸ்.எச்.எம். ஜெமீல் எழுதிய ‘இஸ்லாமிய கல்வி’ என்ற நூலில் கல்வியின் முக்கியத்துவம், கல்வி தொடர்பான அல்குர்ஆன், சுன்னா என்பனவற்றின் வழிகாட்டல்கள் மற்றும் கல்விச் சிந்தனைகள், கல்வி முறைகள் போன்றன கூறப்பட்டுள்ளன.

சோ. சந்திரசேகரன் எழுதிய ‘உயர்கல்வி சிந்தனையின் புதிய நெறிகள்’ எனும் நூலில் இலங்கையின் உயர்கல்வி பற்றியும் உயர் கல்வியின் நோக்கங்கள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

றவூப் ஸெய்ன் எழுதிய ‘இலங்கை முஸ்லிம்களின் கல்வி: சவால்களும் முன்மொழிவுகளும்’ என்ற நூலில் இலங்கை முஸ்லிம்களின் பாடசாலைக் கல்வி, அஹதிய்யா கல்வி, சிங்கள மொழி மூலக் கல்வி மற்றும் முஸ்லிம்களின் ஆங்கில மொழி மூலக் கல்வி போன்ற பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.

கொழும்பு மார்க்கா நிறுவனம் 1994ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 மற்றும் 20ஆம் திகதிகளில் நடாத்திய தேசிய கல்வி மகா நாட்டில் பாத்திமா சுல்பிகா என்பவரால் ‘முஸ்லிம் பெண்களின் உயர்கல்வி நிலை என்ற தலைப்பில் ஓர் ஆய்வு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாய்வில் 1990ஆம் ஆண்டு வரையான இலங்கை முஸ்லிம்களின் உயர்கல்வி வளர்ச்சி பற்றி ஆராயப்பட்டுள்ளது. அத்தோடு முஸ்லிம் பெண்களின் உயர்கல்வி வளர்ச்சி என்ற தலைப்பில் 1982 – 1990 வரையான காலப்பகுதியில் முஸ்லிம் பெண்களின் உயர்கல்வி வளர்ச்சி தரவுகளுடன் ஆராயப்பட்டுள்ளது. மேலும், முஸ்லிம் பெண்களின் உயர் கல்வி விரயமாக்கப்படுதல் எனும் உபதலைப்பில் கல்முனைப் பிரதேசத்தை மையப்படுத்தியதாக பல்கலைக்கழகக் கல்வி விரயமாக்கப்படுவதற்கான காரணங்களும் அவை சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளதோடு இறுதியில் பெண்கல்வியின் இன்றைய தேவை பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

மேலும், என்.பீ.எம். சைபுதீன் மற்றும் எஸ்.எச்.ஹஸ்புல்லாஹ் போன்றோரினால் முன்வைக்கப்பட்டுள்ள ‘உயர்கல்வியில் முஸ்லிம்கள்: ஒரு பின்னணி அறிக்கை’ என்ற ஆய்வில் உயர்கல்வியில் முஸ்லிம்களின் ஈடுபாடு பற்றியும் பங்களிப்புகள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளதோடு முஸ்லிம்கள் அடைந்துள்ள அடைவுகள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. அத்துடன், இவ்வாய்வில் முஸ்லிம்களின் உயர்கல்வியின் ஈடுபாட்டில் காணப்படுகின்ற எண்ணிக்கை வேறுபாடு பற்றியும்

ஆராயப்பட்டுள்ளதுடன் முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் சில பிரச்சினைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

எம்.எஸ். இஸ்ஸதுன் நிஸா என்பவரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 'முஸ்லிம் பெண் கல்வி ஒரு பொது நோக்கு' என்ற ஆய்வில் முஸ்லிம் பெண்களின் கல்வி வரலாறு பற்றியும் முஸ்லிம் பெண்கள் இன்று வரை கல்வியில் அடைந்துள்ள முன்னேற்றம், கவ்வியைத் தொடர்வதில் முஸ்லிம் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் போன்றனவும் ஆராயப்பட்டுள்ளதோடு இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சில ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.


அத்துடன், எம். எஸ். இஸ்ஸதுன் நிஸா மற்றும் எஸ்.எச். ஹஸ்புல்லாஹ் என்போரினால் முன்வைக்கப்பட்டுள்ள 'முஸ்லிம் பெண் கல்வி: ஒரு பின்னணி அறிக்கை' என்ற ஆய்வில் இலங்கையில் முஸ்லிம் பெண்களின் உயர்கல்வி வளர்ச்சி, சுதந்திரத்திற்கு முன், சுதந்திரத்திற்குப் பின் என்றவகையில் பிரதேச ரீதியாக ஆராயப்பட்டுள்ளதோடு முஸ்லிம் பெண்களின் கல்வியைப் பாதிக்கும் சில காரணிகளும் ஆராயப்பட்டுள்ளன.

இவ்வாறாக முஸ்லிம் பெண்களின் உயர்கல்வியை மதிப்பிடுவதற்காகப் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் குறிப்பாக எலமல்பொத பிரதேசத்தை மையப்படுத்தியதாக எதுவித ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை. அந்தவகையில் இவ்வாய்வு முன்னர் செய்யப்பட்ட ஆய்வுகளிலிருந்து முற்றிலும் வேறுபடுகின்றது.

### கலந்துரையாடல்களும் அடைவுகளும் (Discussion / Findings):

இவ்வாய்வில் எலமல்பொத முஸ்லிம் பெண்கள் 100 பேரை எழுமாறாகக் கொண்டு பெறப்பட்ட தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. அந்தவகையில் இவ்வாய்வுப் பிரதேசத்திலுள்ள பெண்கள், ஆசிரியர்கள், அரச ஊழியர்கள் போன்றோருடன் கலந்துரையாடி தகவல்கள் பெறப்பட்டுள்ளன. இதில் சில தகவல்கள் Microsoft Excel மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. க.பொ.த. உயர்தரம் வரை பயின்ற எலமல்பொத முஸ்லிம் பெண்களுக்கு எழுமாறாக வழங்கப்பட்ட 100 வினாக்கொத்துகள் மற்றும் பெறப்பட்ட நேர்காணல்களின் படி விபரங்கள் பின்வருமாறு:

வரைபு: 01





எனவே, இவ்வாய்வுப் பிரதேசத்தில் க.பொ.த. உயர்தரம் வரை பயின்ற பெண்களுக்கு எழுமாறாக வழங்கப்பட்ட 100 வினாக்கொத்துகளின் படி: 20-25 வயதிற்குட்பட்டோர் 29 பேரும் 26-30 வயதிற்குட்பட்டோர் 35 பேரும் 31- 35 வயதிற்குட்பட்டோர் 12 பேரும் 36-40 வயதிற்குட்பட்டோர் 07பேரும் 41-45 வயதிற்குட்பட்டோர் 04 பேரும் 46-50 வயதிற்குட்பட்டோர் 03 பேரும் 51-55 வயதிற்குட்பட்டோர் 06 பேரும் 56-60 வயதிற்குட்பட்டோர் 04 பேரும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாய்வுப் பிரதேசத்தில் அதிகமானோர் க.பொ.த உயர்தரக் கல்வியைக் கற்றவர்களாகக் காணப்படுகின்றனர். சிலர் க.பொ.த. சாதாரணக் கவ்வி வரை கற்றவர்களாகவும் மற்றும் சிலர் தொழில்நுட்பக் கல்வி அத்துடன் ஏனைய துறைகளில் ஆர்வம் செலுத்துவோராகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆய்வுப்பிரதேசத்திலுள்ள பெண்களில் 06 பேர் பல்கலைக்கழக மாணவர்களாகவும் 02 பேர் கல்வியற் கல்லூரி மாணவர்களாகவும் காணப்படுகின்றனர். அதுமட்டுமன்றி இங்கு 18 பட்டதாரிப் பெண்கள் காணப்படுகின்றனர். இதில் பட்டதாரி ஆசிரியர்கள் 12 பேரும் கல்வியற் கல்லூரி ஆசிரியர்கள் 07 பேரும் காணப்படுகின்றனர். ஏனைய ஆசிரியர்கள் 11 பேரும், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் 03 பேரும், ஏனைய பட்டதாரி உத்தியோகத்தர்கள் 03 பேரும், ஏனைய அரச ஊழியர்கள் 02 பேரும் காணப்படுகின்றனர். மேலும், 01 பெண் வைத்தியரும் 03 ஆசிரியர் கலாசாலை ஆசிரியர்களும் மற்றும் 05 பாலர் பாடசாலை ஆசிரியர்களும் 11 மௌலவியாக்களும் காணப்படுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. அத்துடன் பட்டதாரிப் பெண்களில் 02 பேர் விசேட கலைமாணிப் பட்டத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும், முதுகலைமாணிப் பட்டத்தைத் தொடரும் 01 பெண்ணும் முதுதத்துவமாணிப் பட்டத்தைத் தொடரும் 01 பெண்ணும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் எலமல்பொத பிரதேச முஸ்லிம் பெண்கள் உயர்கல்வியில் பெற்ற வளர்ச்சியை மதிப்பிடுவதற்காக எழுமாறாக வழங்கப்பட்ட வினாக்கொத்தின் படி எலமல்பொத பிரதேசத்தில் இதுவரை உயர்கல்வி பெற்றவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:


வரைபு: 02




எனவே இவ்வாய்வுப் பிரதேசத்தில் குறிப்பாக 1976 இற்கு பின்னரே பெண்கள் உயர்கல்வியைக் கற்கத் தொடங்கியுள்ளனர் என்பது புலனாகின்றது. அத்துடன், இவ்வாய்வுப் பிரதேசத்தில் பல்கலைக்கழகம் சென்று தமது உயர்கல்வியைக் கற்றவர்களின் வளர்ச்சியை நோக்கும் போது: 1974-1978ஆம் வரையான காலப்பகுதியில் 02 பேரும் 1979 -1989 வரையான காலப்பகுதியில் யாருமற்ற நிலையிலும் 1990-1994 வரையான காலப்பகுதியில் ஒருவரும் 1995-1999 வரையான காலப்பகுதியில் 06 பேரும் 2000-2004 வரையான காலப்பகுதியில் 04 பேரும் 2005-2009 வரையான காலப்பகுதியில் 02 பேரும் 2010-2014 வரையான காலப்பகுதியில் 08 பேரும் விளங்குகின்றனர். இவற்றை வைத்துப் பார்க்கும்போது ஆரம்ப காலங்களில் பல்கலைக்கழகம் செல்வோர் குறைவாகவும் இடைப்பட்ட காலங்களில் ஓரளவு அதிகரித்தும் குறைந்தும் காணப்படுவதோடு தற்போது நோக்குமிடத்து அதிகரித்தும் காணப்படுகின்றது எனலாம். அத்துடன், இன்றைய காலங்களைப் பொருத்தளவில் இப்பிரதேசத்திலுள்ள முஸ்லிம் பெண்கள் உயர்கல்வியைத் தொடர்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர் எனலாம்.

ஆய்வுப் பிரதேசத்தில் க.பொ.த. உயர்தரம் வரை பயின்ற பெண்களுக்கு எழுமாறாக வழங்கப்பட்ட 100 வினாக்கொத்துகளின் படி:


வரைபு: 03




ஆய்வுப் பிரதேசத்தில் உயர்கல்வி தொடரும் மற்றும் தொடர்ந்த பெண்களில் 19 பேர் கலைத்துறையிலும் 02 பேர் கல்வியற் துறையிலும் விவசாய விஞ்ஞானம், தொழில் நுட்பம், மருத்துவம் போன்ற துறைகளில் ஒவ்வொருவரும் காணப்படுகின்றனர். எனவே இவ்வாய்வுப் பிரதேச முஸ்லிம் பெண்கள் பெரும்பாலானோர் கலைத்துறையிலே தமது உயர்கல்வியைத் தொடர்கின்றமையும் தொடர்ந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அத்துடன், விவசாயம், விஞ்ஞானம், மருத்துவம், தொழில்நுட்பம் போன்ற துறைகளில் உயர்கல்வியைத் தொடர்ந்தவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவு குறைவாகவே உள்ளனர். அதனால்தான், இப்பிரதேசத்தில் உயர்கல்வியைத் தொடர்ந்துவிட்டு ஆசிரியர் தொழிலிலேயே பெரும்பாலானோர் ஈடுபடுகின்றமை அவதானிக்கத்தக்கது.

இவ்வாய்வுப் பிரதேச முஸ்லிம் பெண்கள் அதிகமானோர் உயர்கல்வியைத் தொடர்வதில் சவால்களை எதிர்கொள்கின்றனர். அந்தவகையில் அவர்களுடைய உயர்கல்வியைத் தொடர்வதில் பொருளாதாரம், சமயம், குடும்பம், சமூகம், கலாச்சாரம், பண்பாடு, அரசியல், கல்வி போன்ற பல்வேறு விதமான சவால்கள் அவர்கள் மத்தியில் தாக்கம் செலுத்துகின்றன. எனவே, இவற்றினை நோக்குகையில்: ஆய்வுப் பிரதேசத்தில் க.பொ.த. உயர்தரம் வரை பயின்ற பெண்களுக்கு எழுமாறாக வழங்கப்பட்ட 100 வினாக்கொத்துகளின் படி:

வரைபு: 04



எனவே, இவ்வாய்வுப் பிரதேசத்தில் முஸ்லிம் பெண்கள் தங்களது உயர்கல்வியைப் பெறுவதில் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றனர் என்பது தெளிவாகின்றது. அந்தவகையில் பொருளாதார ரீதியான சவால்களை 63 பேரும், சமய ரீதியான சவால்களை 10 பேரும், குடும்ப ரீதியான சவால்களை 07 பேரும், சமூக ரீதியான சவால்களை 05 பேரும், கலாச்சார, பண்பாட்டு ரீதியான சவால்களை ஒருவரும், அரசியல் ரீதியான சவால்களை 04 பேரும், கல்வி ரீதியான சவால்களை 06 பேரும் எதிர்கொள்கின்றனர். எனவே, பெரும்பான்மையான முஸ்லிம் பெண்கள் தமது உயர்கல்வியைப் பெற்றுக்கொள்வதில் பொருளாதார ரீதியான சவால்களையே அதிகம் எதிர்கொள்கின்றனர் என்றால் மிகையாகாது.

பொருளாதார ரீதியான சவால்களில் வருமானம் குறைவு, பெற்றோரின்மை, சுயதொழில் இன்மை, அகதி நிலை போன்ற பல்வேறு காரணங்கள் தாக்கம் செலுத்துவதாக உள்ளன. அந்தவகையில் இவ்வாய்வுப் பிரதேசத்தில் பெண்களுக்கு எழுமாறாக வழங்கப்பட்ட வினாக்கொத்துகளின் படி: தமது உயர்கல்வியை தொடர்வதில் பொருளாதார ரீதியாக எதிர்கொள்ளும் சவால்களில் 61 பேர் வருமானக் குறைவையும் 02 பேர் அகதி நிலையையும் எதிர்கொள்கின்றனர் என்பது தெளிவாகின்றது.

அத்துடன், சமய ரீதியான சவால்களைப் பாருத்தளவில் தவறான மதப்புரிந்துணர்வு, பல்லின சமய முரண்பாடு, தீவிர சமயப் போக்கு, இஸ்லாமிய மார்க்கம் போதிக்கப்படாமை போன்றன செல்வாக்குச் செலுத்துகின்றன. அந்தவகையில் இவ்வாய்வுப் பிரதேசத்தில் பெண்களுக்கு எழுமாறாக வழங்கப்பட்ட வினாக்கொத்துகளின் படி: இவ்வாய்வுப் பிரதேச முஸ்லிம் பெண்கள் தமது உயர்கல்வியைத் தொடர்வதில் எதிர்கொள்ளும் சமய ரீதியான சவால்களை நோக்குகையில்: தவறான மதப் புரிந்துணர்வை 03 பேரும் பல்லின சமய முரண்பாட்டை 07 பேரும் எதிர்கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளனர். எனவே, இப்பிரதேச முஸ்லிம் பெண்கள் இலங்கையில் உருவாகியுள்ள பல்லின சமூகங்களுக்கு மத்தியில் காணப்படுகின்ற முரண்பாடுகளாலும் இஸ்லாத்தில் கல்விக்கு வழங்கியுள்ள ஆர்வத்தையும் முக்கியத்துவத்தையும் அறியாமல் அவர்கள் கொண்டுள்ள தப்பபிப்பிராயங்களினாலும் தங்களுடைய உயர்கல்வியைத் தொடர்வதில் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றனர் எனலாம்.

மேலும், குடும்ப ரீதியான சவால்களை நோக்கில்: கணவனின் விருப்பமின்மை, பெற்றோரின் அக்கறையின்மை, உறவினர்களின் தூண்டுதல் போன்ற பல்வேறு விடயங்கள் பெண்களுடைய உயர்கல்வியில் தாக்கம் செலுத்துகின்றன. அந்தவகையில் இவ்வாய்வுப் பிரதேசத்தில் எழுமாறாக வழங்கப்பட்ட வினாக்கொத்துகளின் படி: 03 பேர் கணவனின் விருப்பமின்மை மற்றும் 04 பேர் பெற்றோரின் அக்கறையின்மையையும் சவால்களாக எதிர்கொள்கின்றனர்.

அத்துடன், முஸ்லிம் பெண்கள் எதிர்கொள்ளும் சமூக ரீதியான சவால்களில் பெண்கள் பற்றிய தவறான நோக்கு, பெண்கள் சமூகத்தில் குறுகிய வட்டத்தில் நோக்கப்படல், பெண்கள் அடக்கி ஒடுக்கப்படுதல், இளவயதுத் திருமணம் போன்ற பல்வேறு விடயங்கள் செலுத்துகின்றன. அந்தவகையில் இவ்வாய்வுப் பிரதேச முஸ்லிம் பெண்கள் தங்களுடைய உயர்கல்வியை தொடர்வதில் எதிர்கொள்ளும் சமூக ரீதியான சவால்களில் பெண்கள் பற்றிய தவறான நோக்கை 02 பேரும் இளவயதுத் திருமணத்தை 03 பேரும் சவால்களாகக் கொள்கின்றனர என்பது தெளிவாகின்றது.


அடுத்து முஸ்லிம் பெண்கள் உயர்கல்வியைத் தொடர்வதில் எதிர்கொள்ளும் கலாச்சார, பண்பாட்டு ரீதியிலான சவால்களில் இஸ்லாமிய ஆடைகள் புறக்கணிப்பு, ஹராம், ஹலால் பேணப்படாத உணவு வகைகளின் அறிமுகம், பிற சமய பழக்கவழக்கங்கள், இஸ்லாமிய ஒழுக்க விழுமியங்கள் பேணப்படாமை போன்ற பல்வேறு விடயங்கள் தாக்கம் செலுத்துகின்றன. அந்தவகையில் இவ்வாய்வுப் பிரதேசத்தில் எழுமாறாக வழங்கப்பட்ட வினாக்கொத்துகளின் படி 03 பேர் பிற சமயப் பழக்கவழக்கங்களையும் ஒருவர் இஸ்லாமிய ஆடைகள் புறக்கணிக்கப்படுவதையும் சவால்களாக எதிர்கொள்வதாக அறிய முடிகின்றது.

மேலும், முஸ்லிம் பெண்கள் உயர்கல்வியைத் தொடர்வதில் எதிர்நோக்கும் அரசியல் ரீதியான சவால்களில் பயங்கரவாத அச்சுறுத்தல், போக்குவரத்துப் பிரச்சினை, நாட்டில் பாதுகாப்பின்மை, உள்நாட்டுக் கலவரங்கள் மற்றும் குழப்பங்கள் போன்றன தாக்கம் செலுத்துகின்றன. அந்தவகையில் இவ்வாய்வுப் பிரதேசத்தில் எழுமாறாக வழங்கப்பட்ட வினாக்கொத்துகளின் படி: பயங்கரவாத அச்சுறுத்தலை ஒருவரும் போக்குவரத்துப் பிரச்சினையை இருவரும் உள்நாட்டுக் கலவரங்கள், குழப்பங்களை ஒருவரும் சவால்களாக எதிர்கொள்கின்றனர் எனலாம்.

மேலும், முஸ்லிம் பெண்கள் உயர்கல்வியைத் தொடர்வதிலுள்ள கல்வி ரீதியான சவால்களில் மொழிப் பிரச்சினை, கலவன் அமைப்பு, முஸ்லிம் மாணவர்கள் புறக்கணிக்கப்படுதல், ஏனைய கல்விக் கொள்கைகள் போன்றன பல்வேறு விடயங்களில் தாக்கம் செலுத்துகின்றன. அந்தவகையில் மொழிப்பிரச்சினையை 04 பேரும் ஏனைய கல்விக் கொள்கையை 02 பேரும் சவால்களாக எதிர்கொள்கின்றனர்.

எலமல்பொத முஸ்லிம் பெண்களுக்கு எழுமாறாக வழங்கப்பட்ட 100 வினாக்கொத்துகளின் படி இவ்வாய்வுப் பிரதேச முஸ்லிம் பெண்கள் உயர் கல்வியைத் தெரிவு செய்தமைக்கான காரணங்கள் பின்வருமாறு:


வரைபு: 05




எனவே, எலமல்பொத முஸ்லிம் பெண்கள் உயர்கல்வியைத் தெரிவு செய்தமைக்கான காரணங்கள் யாவும் அவர்கள் உயர்கல்வி மூலம் அடைந்துள்ள சாதகங்களாகவே கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாய்வுப் பிரதேச முஸ்லிம் பெண்கள் தாம் உயர் கல்வியைத் தெரிவு செய்தமைக்கான காரணங்களில் 14 பேர் தொழில் வாய்ப்பைப் பெறவும் 03 பேர் பொருளீட்டுவதற்காகவும் 04 பேர் சமூகம் உயர்வடைய வேண்டியும் 02 பேர் அறிவைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் தெரிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எலமல்பொத முஸ்லிம் பெண்களுக்கு எழுமாறாக வழங்கப்பட்ட 100 வினாக்கொத்துகளின் படி இவ்வாய்வுப் பிரதேச முஸ்லிம் பெண்கள் உயர் கல்வியைப் பெறுவதால் அடையும் பாதகங்கள் பின்வருமாறு:

வரைபு: 06




எனவே, இவ்வாய்வுப் பிரதேச முஸ்லிம் பெண்கள் உயர்கல்வியைத் தொடர்வதால் அடையும் பாதகங்களில் எலமல்பொத முஸ்லிம் பெண்கள் தங்களது உயர்கல்வியைப் பெறுவதால் அடையும் பாதகங்களில் 20 பேர் ஓய்வு நேரமின்மையையும் 52 பேர் பணச் செலவு அதிகரித்தலையும் 08 பேர் குடும்பத்தை விட்டு பிரிதலையும் 06 பேர் பிள்ளை பராமரிப்பு பாதிப்புறுதலையும் 04 பேர் கணவன் புறக்கணிக்கப்படுதலையும் 02 பேர் கடுமையான வேலைப் பளுவையும் 08 பேர் உடல் நலக் குறைவையும் பாதகங்களாக எதிர்கொள்கின்றனர். இவற்றில் பணச்செலவு அதிகரித்தலே மிக அதிகமாகக் காணப்படுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. அத்துடன் ஓய்வு நேரம் குறைவாக காணப்படுகின்றமை அதிகமாகவும் குடும்பத்தை விட்டுப் பிரிதல், உடல் நலக்குறைவு போன்ற பாதக விடயங்கள் ஓரளவாகவும் கணவன் புறக்கணிக்கப்படுதல், பிள்ளைப் பராமரிப்பு பாதிப்புறல் போன்ற காரணங்கள் குறைவாகவும் காணப்படுகின்றமை அவதானிக்கத்தக்கது.

## முடிவு (Conclusion)

எலமல்பொத முஸ்லிம் பெண்கள் தங்கள் உயர்கல்வியைத் தொடர்வதில் பல்வேறு சவால்களை எதிர்கொண்ட போதிலும் அதிகமானோர் தங்களது உயர்கல்வியைத் தொடர்ந்தவர்களாகவும் மற்றும் தொடர்வோராகவும் காணப்படுகின்றனர். இப்பிரதேச ஆண்களோடு ஒப்பிட்டு நோக்கும்போது இப்பிரதேச பெண்களே கல்வியிலும் உயர்கல்வி வளர்ச்சியிலும் முதன்மை பெற்று விளங்குகின்றனர்.

எனவே, இப்பிரதேச முஸ்லிம் பெண்கள் தங்களது உயர்கல்வியைப் பெறுவதில் எதிர்நோக்கும் சவால்களைக் களைந்தெறிவதன் மூலம் மேலும் முன்னேறலாம். அத்துடன், தமது முஸ்லிம் சமூகத்தையும் முன்மாதிரி மிக்க சமூகமாக மாற்றலாம் என்பது வெளிப்படையான உண்மையாகும். இப்பிரதேச மக்கள் உயர்கல்வியிலே சிறந்து விளங்க வேண்டுமெனில் அவர்களுக்கான பாடசாலைக் கல்வியை உரியமுறையில் பல்வேறு துறைகளில் வழங்க வேண்டும். இவர்களுடைய உயர்கல்வி வளர்ச்சியில் பெற்றோரும் குடும்ப அங்கத்தவர்களும் அக்கறையுடன் நடந்து கொள்ள வேண்டும். அத்துடன், பொருளாதார நிலையை உயர்த்தும் கைத்தொழில் வேலைத்திட்டங்களை இப்பிரதேசத்திற்கு கொண்டு வருவதன் மூலம் இப்பிரதேச முஸ்லிம் பெண்கள் பொருளாதார ரீதியாக எதிர்கொள்ளும் சவாலை ஓரளவு நிவர்த்தி செய்யலாம். மேலும், பாடசாலைகளில் மாணவர்களுக்கான ஊக்குவிப்புகளை வழங்குவதோடு அவர்கள் கற்கும் போதே அவர்களுக்கான உயர்கல்வித்துறை வழிகாட்டல்களையும் தொழிற்துறை வழிகாட்டல்களையும் சரியான முறையில் வழங்க வேண்டும். ஒவ்வொரு மாணவர்களின் தனித்திறமைகளும் உள்ளார்ந்த ஆர்வங்களும் தனியாக இனங்காணப்பட்டு, வளர்க்கப்பட்டால் அவர்களது உயர்கல்வியானது அவர்கள் மிக ஆர்வம் செலுத்தும் சிறந்ததொரு துறையில் அமையப்பெறும் என்பதில் ஐயமில்லை.

மேலும், பல்கலைக்கழகக் கல்வியின் முக்கியத்துவம், அங்கு கற்க முடியுமான கற்கை நெறிகள், புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள கற்கைநெறிகள், உலகில் தொழிற்தேவை அதிகாகவுள்ள பாடங்கள் போன்ற விடயங்கள் தொடர்பான எல்லா வழிகாட்டல்களையும் அவர்களுக்கு வழங்க வேண்டும். இவ்வாறான வழிகாட்டல்கள் மூலம் அவர்களின் பல்கலைக்கழகக் கல்வி தொடர்பான அறியாமை மற்றும் தப்பபிப்பிராயங்கள் என்பன களையப்படுவதற்கு வாய்ப்பாக அமையும்.

மேலும், முஸ்லிம் பெண்களுக்கு சமூக ரீதியிலான தேவைகளும் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும். ஒரு சமூகத்தின் உயர்வுக்கும் அதன் சீரான வளர்ச்சிக்கும் தேவையான சமூக வளவாளர்களை உருவாக்குவது அச்சமூகத்தின் மீதுள்ள கூட்டுப்பொறுப்பாகும் என்பதை புரிய வைக்க வேண்டும். அதுமட்டுமன்றி இஸ்லாமிய பெண்களின் மனதில் உள்ள இஸ்லாத்தின் கல்விக் கொள்கை பற்றிய தெளிவின்மை மற்றும் தப்பபிப்பிராயங்களை களைய வேண்டும். குறிப்பாக முஸ்லிம் பெண்களுக்கு உயர்கல்வி தொடர்பான பாரியதொரு விழிப்புணர்வை ஏற்படுத்தி முஸ்லிம் சமூகத்தின் ஆரோக்கியம், கல்வி, தொடர்பாடல், அரசியல், பொருளாதாரம், மார்க்கம் போன்ற விடயங்கள் பற்றியும் அவற்றினுள்ளே அமைந்துள்ள பல்வேறு துறைகள் பற்றியும் கற்றறிந்த, விசேட நிபுணத்துவம் பெற்ற அறிஞர்கள் மற்றும் ஆய்வாளர்களை போதுமானளவு உருவாக்குவது முஸ்லிம் சமூகத்தினுடைய கடமையாகும்.

**உசாத்துணைகள்**


1) Anis Ahmed, 1992, ***Muslim Women and higher Education***, Beirut: Kazin publication.
2) Sajjad.M., 1998, ***Muslim Women and higher Education***, Beirut: Kazin publication.
3) சந்தானம். எஸ்., 1993,***கல்விக் கோட்பாடுகளும் தத்துவங்களும்***, சென்னை: சாந்தா பப்ளிஷர்ஸ்.
4) சைபுத்தீன். என்.பீ.எம்., ஹஸ்புல்லாஹ். எல்.எச்.எம்., 1993,***முஸ்லிம்களின் கல்விப் போக்கு***, பேராதனை: பேராதனைப் பல்கலைக்கழகம்.
5) றவூப் ஸெய்ன், 2009,***இலங்கை முஸ்லிம்களின் கல்வி சவால்களும் முன்மொழிவுகளும்***,Ibnu kalam Research institution for social science
6) றிம்சான் ஹம்தூன், 1998,***இலங்கை முஸ்லிம்களின் கல்வியும் அரசியலும்***, பேருவளை: அல்கலம் பதிப்பகம்.
7) ஜெமில். எஸ்.எச்.எம்., 1990,***முஸ்லிம் உயர்கல்விச் சிந்தனைகள்***, கல்முனை: இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம்.
8) ஜெமில். எஸ்.எச்.எம்., 1996,***இஸ்லாமியக் கல்வி***, கல்முனை: இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம்.
9) மஸாஹிர். எஸ்.எம்.எம்., 2010,***இலங்கை முஸ்லிம்களின் பல்கலைக்கழகக் கல்வியும் பின்னடைவுக்கான காரணங்களும்***, அல்-இஸ்லாஹ் (இதழ்:04), இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்: முஸ்லிம் மஜ்லிஸ்.
10) மக்பூன் றிபாய், 2009,***இலங்கை முஸ்லிம் சமூகத்தின் கல்விப் பிரச்சினைகள் பற்றிய அறிக்கை***[Online].Available: www.lankamuslim.info/2009/12/blog_post_08 html, [2014.09.22]